28.08.2017

தினமணி

## தமிழகத்தில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு



காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக , அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது: தெற்கு ஆந்திர கடற்கரையிலிருந்து கன்னியாகுமரி கடல்பகுதி வரை, தமிழகத்தின் உள் மாவட்டங்கள் வழியாக காற்றழுத்தத் தாழ்வு நிலை நிலவுகிறது. வெப்பச் சலனத்தின் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் வட தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் , தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றனர். தூத்துக்குடியில் வெயில் சதம்: தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை தூத்துக்குடியில் மட்டும் 100 டிகிரி வெயில் பதிவானது. மழை அளவு: ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டில் 70 மி.மீ., சென்னை சத்யபாமா பல்கலைக்கழகப் பகுதி , பரங்கிப்பேட்டை, சேத்தியாதோப்பில் தலா 50

மி.மீ., கேளம்பாக்கம், வால்பாறையில் தலா 40 மி.மீ., மழை பதிவானது. காவேரிப்பாக்கம், தேவாலா, பூந்தமல்லி, சிதம்பரம், பொன்னேரி, மகாபலிபுரம், எண்ணூர், கடலூர், சென்னை, சின்னக்கல்லாறு, விழுப்புரம், நடுவட்டம், செங்கல்பட்டு உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 55.79 அடியாக உயர்வு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 55.79 அடியாக உயர்ந்தது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் லேசான மழை பெய்து வருவதால் , மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை 7,133 கன அடியாக அதிகரித்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,300 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் அணை நீர்மட்டம் 55.79 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 21.65 டி.எம்.சி.யாக இருந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் , அணையில் மீன் வளம் பெருகும் நிலை உருவாகி உள்ளதால், மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தமிழகம், புதுவையில் ஒருசில இடங்களில் மழை வாய்ப்பு



தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் செவ்வாய்க்கிழமை இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வுமைய அதிகாரி ஒருவர் கூறுகையில் , "தெற்கு ஆந்திர கடலோரப் பகுதி முதல் கன்னியாகுமரி வரை , வடக்கு உள் தமிழகம் வழியாக காற்றழுத்த தாழ்வுநிலை ஒன்று நிலவி வருகிறது. மேலும் தெற்கு ஆந்திர கடலோரப் பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சியும் நிலவி வருகிறது.

இவை காரணமாகவும் , வெப்பச் சலனம் காரணமாகவும் , அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. மேலும் சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன்

காணப்படும். நகரின் சில பகுதிகளில் இடியுடன் கூடியமழை பெய்யக்கூடும் " என்று தெரிவித்தார்.

தினத் தந்தி

## வட தமிழகத்தில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தகவல்



வட தமிழகத்தில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை,

காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாகவும் , வெப்பசலனம் காரணமாகவும் தமிழகத்தில் பரவலாக கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் வெப்பம் தணிந்து இதமான சூழ்நிலை நிலவி வருகிறது. தற்போது காற்றழுத்த தாழ்வு நிலையானது ஆந்திர கடல் பகுதியில் இருந்து குமரி கடல் பகுதி வரை நிலை கொண்டுள்ளது. இதனால் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:-

தெற்கு ஆந்திர கடல் பகுதியில் இருந்து குமரி கடல் பகுதி வரை தமிழ்நாட்டின் உள் மாவட்டங்கள் வழியாக நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாகவும் , வெப்பசலனம் காரணமாகவும் அடுத்த 24 மணி நேரத்திற்கு வட தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரு சில இடங்களிலும் , தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். சென்னையை பொறுத்தமட்டில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் பலத்த மழை பெய்யக்கூடும்.

கடந்த 24 மணி நேரத்தில் பள்ளிப்பட்டில் 7 செ.மீ., பரங்கிப்பேட்டை, சேத்தியாதோப்பில் தலா 5 செ.மீ., கேளம்பாக்கம், வால்பாறையில் தலா 4 செ.மீ, பூந்தமல்லி, காட்டுக்குப்பத்தில் தலா 3 செ.மீ, சிதம்பரம், பொன்னேரி, மகாபலிபுரம், எண்ணூர், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, திருப்பத்தூரில் தலா 2 செ.மீ, வேலூர், ஸ்ரீபெரும்புதூர், திருத்தணி, தாமரைப்பாக்கம், வானூர், சேலம், சோழவரம், திருவள்ளூரில் தலா 1 செ.மீ. மழை பெய்துள்ளது. இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.